**மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2013**

மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் 08 (5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நுழைவுச்சீட்டு கூடத்தில் எஞ்சியிருந்த ரூபா 86,530 கிரயத்திலான நுழைவுச்சீட்டுக்கள் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,208,000 ஆன வைப்புத்தொகை நிதியத்தின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மீள்நிரப்பக்கூடிய செலவினங்களுக்காக பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு செய்யத் தேவையற்ற போதிலும் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது மூன்று குத்தகையாளர்களிடமிருந்து மீள்நிரப்பப்பட்ட ரூபா 313,805 தொகையான மின்சாரச் செலவினத்தை வருமானமாகக் கருதி பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான வரிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலத்தை மிகைத்து முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 47,081,891 கிரயத்திலான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,354,094 தொகை பெறுமானத் தேய்வு செய்த காரணத்தால் பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமானத் தேய்வு என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நுழைவுச்சீட்டு விற்பனையால் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 2,787,045 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி வைப்புக் கணக்கின் மீதி ரூபா 1,318,581,680 ஆக இருந்ததுடன், திறைசேரியின் கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா

1,319,172,030 ஆக இருந்தது. இதனிடையே வேறுபாடான ரூபா 590,350 தொகை பிணைப்பொறுப்பினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் மிருக பரிமாற்றல் செலவினம் ரூபா 6,871,929 தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருந்த பதிவேட்டின் பிரகாரம் அச்செலவினம் ரூபா 6,748,445 ஆக இருந்தமையால் ரூபா 123,484 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் விரிவான பட்டோலையின் பிரகாரம் நுழைவுச்சீட்டுக்கள் வருமானத்திற்கும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த நுழைவுச்சீட்டு வருமானத்திற்குமிடையே ரூபா 2,538,670 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. கணக்கீடு செய்யப்படாத வருமானமாக ரூபா 2,787,045 தொகை சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் மேலும் ரூபா 248,375 வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | முடிவுறாத வேலை (வாகொல்ல புதிய மிருகக் காட்சிசாலை, சபாரி தோட்டம் மற்றும் தெஹிவள மிருகக் காட்சிசாலை என்பவற்றின் நிர்மாணங்களுக்குரியவை) | 756,763,930 | வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணங்களின் கிரயத்தை வெவ்வேறாக காட்டும் பட்டோலை |
| (ஆ) | முன்னைய ஆண்டு சீராக்கம் (2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரியவை) | 8,490,000 | நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் |
| (இ) | நினைவுச் சின்ன பொருள் இருப்பு | 3,049,123 | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு, நிதிப் பிரமாணம் 104 அறிக்கை, புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான திறைசேரியின் அங்கீகாரம் |
| (ஈ) | நினைவுப் புத்தகங்கள் | 2,032,544 | 2012 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பான விரிவான பட்டோலை மற்றும் பகிர்ந்தளித்தல் பட்டோலை |
| (உ) | வைப்புப் பதிவேடு | 935,700 | பதிவழிப்பதற்கான அங்கீகாரம் மற்றும் விரிவான பட்டோலை |
| (ஊ) | கடன்கொடுத்தோர் | 340,982 | விரிவான பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

**3 நிதி மீளாய்வு**

**3.1. நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 415,114,492 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 397,537,423 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 17,577,069 ஆன அதிகரிப்பு தென்பட்டது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 62,789,692 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன், நிதியத்தின் செலவினம் ரூபா 45,212,622 ஆல் அதிகரித்திருந்தது. மேலும் நுழைவுச் சீட்டுக்கள் வருமானம் முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு ஒப்பாக ரூபா 66,793,720 ஆல் அதிகரித்திருந்ததுடன், அதில் ரூபா 55,950,950 தொகை பின்னவெல யானைகள் சரணாலய நுழைவுச் சீட்டுக்கள் வருமானம் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் திடீர் விபத்து படிகள் கொடுப்பனவு ரூபா 13,198,814 ஆல் அதிகரித்திருந்ததுடன், 2013 சனவரி 01 முதல் மாதாந்த திடீர் விபத்து படிகள் ரூபா 2,500 வரை ரூபா 2,100 ஆல் அதிகரித்தமை அதற்கான காரணமாக இருந்தது. இந்த திடீர் விபத்து படிகளுக்காக வருகையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு செய்யும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**04 செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 பார்வையாளர்களின் வருகையும் வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் தெஹிவள மிருகக்காட்சிசாலை மற்றும் பின்னவெல யானைகள் சரணாலயம் என்பவற்றை பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) தெஹிவள மிருகக்காட்சிசாலை

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் | பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் |
| | | ரூபா | | ரூபா |
| உள்நாடு | 1,429,322 | 112,079,300 | 1,412,062 | 110,039,210 |
| வெளிநாடு | 27,120 | 34,521,500 | 21,188 | 25,108,000 |
| மொத்தம் | 1,456,442 | 146,600,800 | 1,433,250 | 135,147,210 |

தெஹிவள மிருகக்காட்சிசாலைக்கு வருகை தந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5,932 ஆல் அல்லது 28 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 9,413,500 ஆல் அல்லது 37.5 ஆல் அதிகரித்திருந்தது. அவ்வாறே உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருமானம் முறையே 17,260 ஆலும் ரூபா 2,040,090 ஆலும் அதிகரித்திருந்தது.

(ஆ) பின்னவெல யானைகள் சரணாலயம்

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் | பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை | பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் |
| | | ரூபா | | ரூபா |
| உள்நாடு | 437,628 | 33,115,310 | 497,157 | 36,083,510 |
| வெளிநாடு | 278,740 | 516,401,750 | 266,297 | 455,554,750 |
| மொத்தம் | 716,368 | 549,517,060 | 763,454 | 491,638,260 |

பின்னவெல யானைகள் சரணாலயத்திற்கு வருகை தந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12,443 ஆல் அல்லது 4.7 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 60,847,000 ஆல் அல்லது 13.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை 59,529 ஆல் அல்லது 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் உள்நாட்டு பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் ரூபா 2,968,200 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) வெளிநாட்டவரின் வசதிக்காக வேறாக நுழைவுச்சீட்டுக் கூடங்கள் வேறாக ஒதுக்கப்படாமல் இருந்ததுடன், ஆங்கிலம் உட்பட ஏனைய மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள பதவியணியினர் கொண்ட நுழைவுச்சீட்டுக் கூடத்தின் சேவைக்காக

ஈடுபடுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றுலாப் பிரயாணிகளுக்காக பார்வையாளர் அரங்கொன்று நிர்மாணிக்கப்பட்டு தேவையான வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் 03 விற்பனைக் கூடங்கள் மாதந்த வாடகை ரூபா 30,000 தொகை, ரூபா 20,000 தொகை மற்றும் ரூபா 15,000 தொகை என மூன்று நிறுவனங்களுக்கு ஓராண்டு காலத்திற்காக குத்தகைக்கு வழங்கும் போது குறித்த உடன்படிக்கைகளில் பெறுமதி சேர் வரி தொடர்பாக குறிப்பிடப்படாமல் இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 62,678 தொகை பெறுமதி சேர் வரியாக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 89,015,000 பெறுமதியான 15 யானைகள் ஆண்டின் இறுதியில் வெளித்தரப்பினருக்கு பராமரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அம்மிருகங்களின் உள்ளமை தொடர்பாக உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்னவல யானைகள் சரணாலயத்திற்குரிய 2013/2014 ஆம் ஆண்டிற்காக பழவகை வழங்கல் கேள்வி ரூபா 7,615,725 இற்கு வழங்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முதலாவது செய்தித்தாள் அறிவித்தலை வெளியிட்டு அதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற இரண்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் நிராகரிக்கப்பட்டு மீண்டும் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் முன்னர் கேள்வி சமர்ப்பித்திருந்த கேள்விதாரராக இருந்ததுடன், அவராலே இரண்டாவது சந்தர்ப்பத்தில் புளி வாழைப்பழம், பாணி பூசணி மற்றும் அண்ணாசிப் பழம் போன்ற ஒவ்வொரு பழங்களுக்கும் கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 10 வீதம் கூட்டி ரூபா 95, ரூபா 126 மற்றும் ரூபா 175 ஆக கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் முதலாவது கேள்வி நிராகரிக்கப்பட்டதன் காரணமாக நிதியத்திற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவுக் குழு என்பவற்றினால் ரூபா 690,618 ஆன வெளிப்படையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) 2012/2013 ஆம் ஆண்டிற்காக பழவகைகளை வழங்குவதற்கான கேள்வியும் இந்த வழங்குனரால் வழங்கப்பட்டிருந்ததுடன், அவரால் மேற்குறித்த பழங்களை ஒரு கிலோ கிராம் 2013/2014 ஆம் ஆண்டினை விட முறையே ரூபா 30, ரூபா 61 மற்றும் ரூபா 65 ஆல் குறைவான விலையில் வழங்கப்பட்டிருந்தன.

(iii) இந்த விலை விபரங்கள் தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு அப்பழங்கள் வழங்கும் விலையை விட முறையே ரூபா 45.50 ரூபா 67 மற்றும் ரூபா 105 ஆல் கூடிய விலையிலாகும். அதன் பிரகாரம் யானைகள் சரணாலயத்திற்காக பழவகை வழங்கல் விலை தெஹிவளை வழங்கல் விலையை விட 92 சதவீதம், 113 சதவீதம் மற்றும் 150 சதவீதத்தால் கூடிய மட்டத்தில் காணப்பட்டன.

(iv) 2013 சனவரி முதல் 2013 திசெம்பர் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உடன்படிக்கை செய்யப்பட்ட அளவினை விட 19,575 கிலோ கிராம் பழங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,788,953 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன.

### 4.5 ஒப்பந்த நிர்வாகித்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை மிருகக்காட்சிசாலை வளவில் கற்குழிக்கு அருகில் எல்லைச் சுவரின் உடைந்து விழுந்த பகுதிகளைத் திருத்தியமைப்பதற்காக ரூபா 6,023,174 தொகையான மதிப்பீட்டில் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 1,204,634 ஆன வேலை முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் அனைத்து நிர்மாண வேலைகளிலிருந்தும் அகற்றப்பட்டிருந்தமையால் 2014 யூலை 31 ஆம் திகதி வரையில் இந்நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

அப்பணத்தை எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்குள்ள வேறு பட்டியல்களிலிருந்து ஈடுசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளரால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் இடைநடுவில் விடப்பட்டிருந்த சுதந்திர யானை அரண் நிர்மாணங்களுக்குரிய செலுத்தப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10,264,754 ஆக இருந்ததுடன், அதன் வேலைகள் 2014 செப்தம்பர் 30 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெஹிவளை மிருகக்காட்சிசாலை வளவில் நடாத்தப்பட்டு வரும் நலன்புரி விற்பனை நிலையத்தின் மீளாய்வாண்டின் வாடகை வருமானமான ரூபா 4,882,250 ஐ நிதியத்தின் வருமானத்திற்கு செலவு வைக்காமல் அத்திணைக்களத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டமையின் காரணமாக நிதியத்தின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் விற்பனை நிலையத்தின் மின்சாரச் செலவினம் மாதாந்தம் ரூபா 20,000 வீதம் ரூபா 240,000 தொகை மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பிரதான செயற்திட்டத்தின் கீழான ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய நிதிஏற்பாடு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகம் காலாண்டு ரீதியாக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றை ஒப்பிடுவதற்காக போதியளவு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு செயற்பாட்டிற்காக எதிர்பார்த்த மொத்த செலவினம், ஆண்டிலான மதிப்பிடப்பட்ட செலவினம், ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவினம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான செயற்பாடுகளின் பிரகாரம் மாத்திரம் ஆண்டின் நிதிஏற்பாடு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், உப செயற்பாடுகளின் செலவினம் அதன் நிதிசார் செயலாற்றல், செயலாற்றல் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒவ்வொரு செயற்பாட்டிற்காக பணத்தை செலவிடல் மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியத்திருந்தா அல்லது மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினாலா என செயலாற்றல் அறிக்கையின் மூலம் இனங்காண முடியாதிருந்தது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

2013 ஆம் ஆண்டிற்காக மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியத்தினால் உள்ளக கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 கணக்காய்வு குழு**

2013 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

அம்பாந்தோட்டை சபாரி பூங்கா, பின்னவெல புதிய மிருகக்காட்சிசாலை மற்றும் பின்னவெல யானைகள் சரணாலயம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மூலதன மதிப்பீட்டின் மூலம் ரூபா 442,000,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மிருகக்காட்சிசாலைகள் திணைக்கள செலவினத் தலைப்பின் மூலமும் இந்நிர்மாணத்திற்காக ரூபா 284,000,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும், செயற்திட்டத்தின் கீழ் குறித்த செயற்பாடுகளை தனித்தனியாக இனங்காணப்பட்டு நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் மூலதனச் செலவினங்களுக்குரிய நிர்மாணங்களின் பெறுமதியை சரியாக இனங்காண முடியாதிருந்தது.

**5.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் இறுதியில் நினைவுப் பொருட்கள் இருப்புகளுக்கிடையே காணப்பட்ட வேறுபாடாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,049,123 தொகை 2012 ஆம் ஆண்டின் போது திரட்டு நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு மூலம் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர், பிழையான அப்பதிவழிப்பு 2013 இன் நிதிக்கூற்றுக்கள் மூலம் சீராக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும், அவ்வாறான சீராக்கமொன்று 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆதலால் திரட்டு நிதிய மீதி அப்பெறுமானத்தால் குறைவாக காணப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கணக்கீடு
(இ) மிருகங்களுக்கான உணவு வழங்கும் செயற்பாடு
(ஈ) நுழைவுச்சீட்டுக்களை விநியோகித்தலும் வருமான சேகரிப்பும்
(உ) உள்ளகக் கணக்காய்வு
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) வாகனக் கட்டுப்பாடு
(ஏ) செலவினக் கட்டுப்பாடு